## 2.20 2002–2003–ம் ஆண்டு – பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சுற்றுச் சுவர் கட்டியதற்கு செலவழித்த ரூ.90,000/–நிதி விடுவித்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை

கடிதம் (1டி)எண். 163, நாள்: 29.3.2007

அனுப்புநர்

க.அஷோக் வர்தன் ஷெட்டி, இஆப.,
அரசு செயலாளர்.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
ஈரோடு மாவட்டம்,
ஈரோடு.

அய்யா,

பொருள் – ஈரோடு மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி – 2002–2003–ம் ஆண்டு – பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சுற்றுச் சுவர் கட்டியதற்கு செலவழித்த ரூ.90,000/–ஐ விடுவித்தல் – குறித்து.

பார்வை :
1. அரசு ஆணை (நிலை) எண்.138, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை , நாள் 25.5.2000.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் 3460/2000/அ11 , நாள் 12.02.2001
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் 48720/ 02/ திஅ5, நாள் 12.6.2003.
4. அரசு கடிதம் எண்.10697/மாஅதி–2/03–22, நாள் 23.5.2006.
5. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், முன்னாள் பவானி சட்டமன்ற உறுப்பினர் கடித நாள் 20.9.2006.

திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், முன்னாள் பவானி சட்டமன்ற உறுப்பினர், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஐந்து பணிகளை செய்வதற்காக 17–1–2001 அன்று நிர்வாக அனுமதி வழங்குமாறு கோரியிருந்தார். ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவற்றில் மூன்று பணிகளுக்கான நிர்வாக அனுமதியினை 12.02.01 அன்று வழங்கியிருந்தார். மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்னர், பவானி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் ஏற்பு ஏதும் இன்றி பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரால் ந.க.எண்.3460/2000/அ11 நாள் 12.2.01 ன்படி மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. பவானி வட்டாரப் பொறியாளரால் மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஈரோடு உதவி செயற்பொறியாளர் (ஊ.வ.) அவர்களால் தொழில்நுட்ப அனுமதி 2.3.2001ல் வழங்கப்பட்டது. முறையாக ஒப்பந்தப்புள்ளி பெறாமல் தன்னிச்சையாக பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டதால் ஏற்கனவே 12.2.2001ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை இரத்து செய்து 26.8.2003ல் மாவட்ட நிர்வாகம் உத்திரவிட்டுள்ளது. பொதுப்பணித்துறை விதிகளைப் பின்பற்றாமலும் ஒப்பந்தப்புள்ளி கோருவதில் முறையான வழிமுறைகளைப் பின்பற்றாமலும் முன் அனுமதியின்றி ரூ.90,000/– மதிப்பீட்டில் பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டியதற்கான தொகையை சிறப்பினமாகக் கருதி வழங்க உத்திரவு பிறப்பிக்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அரசைக் கேட்டுள்ளார். முன்னாள் ஊரக வளர்ச்சி இயக்குநரும் மேற்காணும் பணிக்காக பின்னேற்பு வழங்குமாறு அரசை கேட்டுள்ளார்.

2. உரிய முன் அனுமதியின்றி பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டியதற்காக ரூ.90,000/– வழங்கக் கோரும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கை நிதித்துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அக்கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக 23.5.2006 நாளிட்ட கடிதத்தில் அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

## 2. MLACDS

3. பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டியதற்காக செலவழித்த தொகையான ரூ. 90,000த்தை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்காக, விடுவித்திடுமாறு முன்னாள் பவானி சட்டமன்ற உறுப்பினர் அரசுக்கு மீண்டும் மனுச் செய்துள்ளார். சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சுற்றுச் சுவர் கட்டும் பணியானது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2002–2003ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தடைசெய்யப்பட்ட பணியாக உள்ளதால், செலவு செய்த ரூ.90,000/–ஐ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்க இயலாது என்று ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில், முன்னாள் பவானி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை மனுவை அரசு கவனமாக ஆராய்ந்து ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சுற்றுச் சுவர் கட்டிய வகையில் செலவு செய்த ரூ.90,000/– தொகையினை, (ரூபாய் தொன்னூறு ஆயிரம் மட்டும்) தனி நேர்வாகக் கருதி இப்பணியை செய்து முடித்த ஒப்பந்ததாரருக்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியிலிருந்து (discretion fund) வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. இக்கடிதம் நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.592/FS/P/2007 நாள் 20.2.2007 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**அரசு செயலாளருக்காக**